**இந்து சமய அறநிலையத்துறை**

**அனுப்புநர்:**
ஆணையர்,
சென்னை-34.

**பெறுநர்:**
1. இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.
(ஒப்புகை பதிவஞ்சலில்)

**ந.க.எண்.29412/2014/பி3, நாள்.23.03.2022**

**பொருள்:** பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.க.ராம்கி, இளநிலை உதவியாளர், – இணை ஆணையர் அலுவலகம் – தஞ்சாவூர் – பணிவரன்முறை செய்யப்பட்டது – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (4ப) எண்.03, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.10.03.2022

******

இத்துறையில் தஞ்சாவூர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.க.ராம்கி, அவர்களுக்கு, பார்வையில் காணும் அரசாணையில் அன்னார் பணியில் சேர்ந்த நாளான 16.08.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை தனியரிடம் சார்பு செய்யும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேலும் தனியர், அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்த பின்னர் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்வது தொடர்பான அறிக்கையினை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு: அரசாணை.

ஒம்/-இரா.கண்ணன்
கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)
(ஆணையருக்காக)

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்
24/03/2022

நகல்

2. திரு.க.ராம்கி,
இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் அலுவலகம்,
தஞ்சாவூர்.

3. மிகை.

SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு.க.ராம்கி, இளநிலை உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை

அரசாணை (4ப) எண்.03

நாள்: 10.03.2022
பிலவ, மாசி – 26
திருவள்ளுவராண்டு–2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.29412 /2014 / பி3, நாள்.01.02.2022.

******

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை உள்ள கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், கும்பகோணம், உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய திரு.சொ.கண்ணையன்

பணியிடையே 29.04.2013-ல் மரணமடைந்தார் எனவும், அன்னாரின் மகனால் திரு.க.ராம்கி என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 29.11.2013 நாளிட்ட கடிதத்தில் விண்ணப்பித்துள்ளார் எனவும், அன்னார் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயது தகுதி பெற்றிருந்தார் எனவும், அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி தனியரால் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது எனவும், இதனை தொடர்ந்து திரு.க.ராம்கி அவர்களுக்கு கருணை அடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு அன்னார் 16.08.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், எனவே, அன்னார் பணியில் சேர்ந்த நாளான 16.08.2017 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர், இணை ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.க.ராம்கி என்பவரின் பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 16.08.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாறு முன்னிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

6. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.3595 / க்யு 1 / 2022, நாள்.27.02.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு.க.ராம்கி, இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் (ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.

நகல்:-

மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/3/22
பிரிவு அலுவலர்

10/3/2022